# குழந்தைகளுக்கு வேதாகமம்
## வழங்குபவர்

# இயேசு ஒரு பெரிய போதகர்




எழுதியவர் : Edward Hughes
சித்தரிப்பவர் : Byron Unger; Lazarus
மொழிபெயர்ப்பாளர் : Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர் : E. Frischbutter; Sarah S.



**கதைகள்** 60 **ல்** 42

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*



உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.


Tamil



இயேசு ஒரு பெரிய போதகர் - எப்பொழுதும் சிறந்தவர், திரளான கூட்டங்கள் அவரை கேட்டார்கள்.

1



இயேசு அவர்களுக்கு சொன்னது இரக்கமுள்ளவர்களாயிருங்கள், நல்லவர்களாய், மற்றும் தயவுவுள்ளவர்களாயிருங்கள்.

2


மற்றவர்கள் வெறுத்து, புண்படுத்தலாம்,
ஆனால் தேவனோ அவர்கள் மேல்
அக்கரையுள்ளவராயிருக்கிறார்.
3


இயேசு அநேக
காரியங்களைக்
கற்பித்தார், ஒரு
மெழுகுவர்த்தி
எப்படி ஒரு
வீட்டிற்கு
வெளிச்சம்
கொடுக்கிறதோ,
அதேபோல்
தேவனுடைய
பிள்ளைகளும்
வெளிச்சம்
கொடுக்கிறார்கள்.
4


ஒரு இருண்ட
அறையிலே ஒரு
மெழுகுவர்த்தி
எவ்வளவு
வித்தியாசத்தை
ஏற்படுத்துகிறது!
5


இயேசு சந்தித்த மக்கள், "கண்ணுக்கு கண்,
பல்லுக்குப் பல்," என்கிற பழிவாங்கும்
சிந்தனையில் காணப்பட்டார்கள்.
ஆனால் இயேசுவோ,
சத்துருக்களுக்கும்
தயவையும்,
மன்னிப்பையும்,
அன்பையும்
காட்டும்படி
போதித்தார்.
6


இயேசுவின் நாட்களில்,
சிலர் பரிசுத்தமாயிருப்பதுபோல்
நடித்தார்கள். ஒரு பிச்சைக்காரனுக்கு
அவர்கள் தானதருமம் செய்யும்போது,
எல்லோரும் பார்க்கும்படி, ஒரு
மனிதனை எக்காளம் ஊதச்
செய்வார்கள்.
7


"இரகசியமாக கொடுங்கள்.
தேவன் உங்களுக்கு
பதிலளிப்பார்," என்று
இயேசு சொன்னார்.
8


ஜெபத்தைக் குறித்தும் இயேசு இப்படிபோதித்தார். சிலர் தாங்கள் ஜெபிப்பதை எல்லோரும் பார்க்கும்படியும், எல்லோரும் கேட்கும்படியும் சுறுசுறுப்பான வீதிகளின் முனையிலே நின்று ஜெபிப்பார்கள்.
9


அவர்கள் தேவனைப் பற்றி கவலைப்படவில்லை மற்றவர்கள் தங்களைக் குறித்து என்ன நினைப்பார்கள் என்று அக்கரைப்பட்டார்கள். இயேசு அவர்களை மாயமாலக்காரர்கள் - தப்பாக நடிப்பவர்கள் - என்று அழைத்தார்.
10


இயேசு போதிக்கும் போது இயற்கை காட்சிகளைக் காட்டி விளக்குவார். உதாரணமாக, ஆகாயத்துப் பறவைகளை காட்டினார். "உங்கள் பரமபிதா அவைகளைப் போஷிக்கிறார்," என்றார். "கவலைப்படாதிருங்கள். தேவன் உங்களையும் போஷிப்பார்."
11


"பெரிய பணக்காரனாகிய சாலமோன் ராஜா கூட இந்த காட்டுப் புஷ்பங்களைப் போல் நன்றாக உடுத்தியதில்லை," இயேசு தொடர்ந்தார்.
12


"தேவன் காட்டு புல்லுக்கு உடுத்துவித்தால், உங்களையும் உடுத்துவிக்க மாட்டாரோ?" நம்முடைய தேவைகளை சந்திக்கிற தேவனை நம்புங்கள் என்று இயேசு போதித்தார்.
13


"நீங்கள் உங்கள் சகோதரனை நியாயந்தீர்ப்பது, உங்களுடைய கண்ணில் உத்திரம் இருக்க, உங்களுடைய சகோதரன் கண்ணில் இருக்கிற துரும்பை எடுக்க முயற்சிப்பதாகும்," என்று இயேசு சொன்னார்.
14


ஒருவேளை ஜனங்கள் பயப்பட்டிருக்கலாம். ஆனால்
அதினுடைய அர்த்தங்களைக் குறித்து
யோசிக்கவேண்டியதாயிற்று.
15


தேவனிடத்தில்
உதவி கேளுங்கள்
என்று இயேசு
சொன்னார்.
இந்த உலகத்தில்
தகப்பன்மார்கள்
தங்களுடைய
பிள்ளைகள்
அப்பத்தைக்
கேட்டால்
பெரிய கல்லை
கொடுப்பார்களா?
16


இல்லையே!
அவர்கள் நல்ல காரியங்களையே
கொடுப்பார்கள். தம்மிடத்தில்
வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு
தேவன் நல்லதையே கொடுப்பார்.
17


தவறான போதனை செய்பவர்களைக்
குறித்து இயேசு எச்சரித்தார்.
"அவர்கள் ஆடுகளைப் போல்
உடை உடுத்துகிறார்கள். ஆனால்
உள்ளேயோ அவர்கள் ஓநாய்கள்,"
என்றார் இயேசு.
18


ஒருவர் தவறான
போதகரா என்பதை அவர்கள்
எப்படி வாழ்கிறார்கள்
என்பதிலிருந்து அறிந்து
கொள்ளலாம்.
19


இயேசு சொன்ன உவமை என்னவெனில், தேவனுடைய
வார்த்தையைக் கேட்டு கீழ்படிகிறவர்கள் கற்பாறையின் மேல்
வீடு கட்டியவர்களுக்கு
ஒப்பாவார்கள்.
20

பெரிய வெள்ளம் வந்தது.
ஆனால் முடிவிலோ,
அந்த வீடு நிலையாக
நின்றது.



21

புத்தியில்லாத மனுஷனோ மணலின் மேல் தன் வீட்டைக் கட்டினான். பெருவெள்ளம் வந்து காற்று வீசியபோது, அது தரைமட்டமானது ஏனெனில் அது பலவீனமான அஸ்திபாரத்தில் கட்டப்பட்டிருந்து. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாதவர்களும் இந்த புத்தியில்லாத மனுஷனுக்கு சமமாயிருக்கிறார்கள்.



22

ஜனக்கூட்டம் இயேசுவின் போதனையைக் கேட்டு ஆச்சரியப்பட்டது. இதைப் போல் அவர்கள் இதுவரை கேட்டதேயில்லை.



23

தேவனுடைய வார்த்தையை கேட்பது மட்டும் போதாது என்று இப்போது ஜனங்கள் உணர்ந்தார்கள். ஒவ்வொரு நாளும் அதற்கு கீழ்ப்படிய வேண்டும்.



24

இயேசு ஒரு பெரிய போதகர்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மத்தேயு 5 - 7, லூக்கா 6

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.